அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருந்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*வேதாரண்யம் துணைக் கருவூலத்திற்கான புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

155—(*வினா எண். 20343)—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் துணைக் கருவூலத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தற்போது வேதாரண்யம் துணைக் கருவூலம் வேதாரண்யம் தாலுகா அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் நடைபெறுகிறது. இக்கட்டிடம் வேதாரண்யம் துணைக் கருவூலம் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. இக்கட்டிடத்தின் பழமையான பகுதி ரூ. 21,000 செலவில் பழுது பார்க்கப்பட்டு முடிக்கும் நிலையில் உள்ளது.